gta endoscopy services inc.

305 மில்னர் அவெனியூ, சூட் 920
ஸ்கார்போரோ, ஒ.என்., M1B3V4
தொலைபேசி : 416.321.3883
தொலைநகல் : 416.321.5162

*நோய் தடுப்பில் கவனம் செலுத்துகிறது, கவனிப்பிற்காக ஏற்படுத்தப்பட்டது*

# கோலோனோஸ்கோப்பி மற்றும் மேல் எண்டோஸ்கோப்பி

## நிறைவேற்றப்பட வேண்டிய அறிவுரைகள்

1. உங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் அனைத்தையும் முன்பு போன்றே எடுத்துக்கொள்ளவும். ஆனால் ஆஸ்பிரின் அல்லது வீக்கத்தடுப்பு மருந்துகளை (Antiinflamatory) 24 மணிநேரத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டாம் கவுமாடினை. (Warfarin) ________________ வரை எடுத்துக்கொள்ளவேண்டாம்.
2. உங்கள் சிகிச்சை நடைமுறை தேதியிலிருந்து ________________ வாரங்களில் உங்கள் மருத்துவரைப் பார்க்க அனுமதி பெறுங்கள்
3. கோலோனோஸ்கோப்பி மேற்கொண்டால் அந்த நடைமுறைக்குப்பின் உங்களுக்கு சற்று உப்பலானது போன்ற உணர்வு ஏற்படக் கூடும். ஏனெனில் இந்த பரிசோதனையின்போது காற்று செலுத்தப்படுகிறது.
4. உங்களுக்கு மேல் எண்டோஸ்கோப்பி மேற்கொள்ளப்பட்டு இருந்தால், உங்கள் தொண்டையில் சில மணி நேரங்களுக்கு வலி இருக்கும். சிகிச்சை நடைமுறைக்குப்பின் சில நிமிடங்களுக்கு உங்களுக்கு சற்று உப்பலான உணர்வு ஏற்படும். ஏனெனில் வயிற்றை ஆராய காற்று அனுப்பப்பட்டுள்ளது.
5. கீழ்கண்ட அறிகுறிகளுக்கு கவனமாக கவனிக்கவும் :
   - ☐ காய்ச்சல் அல்லது குளிர்
   - ☐ 30-60 நிமிடங்களுக்கும் மேல் நீடிக்கும் கடுமையான வயிற்றுவலி மற்றும் லேசான பிடிப்பு நடைமுறைக்குப் பின் 6-12 மணி நேரங்களுக்கு. இவை பொதுவாக இருக்கக்கூடியவை.
   - ☐ குமட்டல் அல்லது வாந்தி
   - ☐ ரத்தப்போக்கு அல்லது கருப்பாக மலம் கழிதல்
   - ☐ வழக்கத்திற்கு மாறான வலி அல்லது பிரச்சினை
   - ☐ சிரைக்குழாயில் ஊசி செலுத்தப்பட்ட இடத்தில் வலி அல்லது செம்மை படர்தல்.

**இந்த அறிகுறிகள் ஏதேனும் நேர்ந்தால் உடனடியாக உங்கள் மருத்துவரை அழைக்கவும், அல்லது அருகில் உள்ள அவசர பிரிவிற்கு செல்லவும். ரவுஜ் வேலி நூற்றாண்டு மருத்துவமனையின் அவசர பிரிவிற்கு செல்வது பரிந்துரைக்கப்படுகிற து. இங்கு எமது அறுவை சிகிச்சை நிபுணர்களில் ஒருவர் 24 மணி நேரமும் / வாரத்தில் 7 நாட்களும். இருப்பார்.)**

6. ஒய்வு: இந்த நடைமுறையின் போது உங்களுக்கு நோவாற்றும் மருந்து (sedatives) வழங்கப்பட்டு இருக்கும். ஆகவே நீங்கள் மிகவும் களைப்பாக உணர்வீர்கள்.
7. அடுத்த 24 மணி நேரத்திற்கு மதுபானங்கள் அருந்தாதீர்கள். உங்களுக்கு வழங்கப்பட்ட நோவாற்றும் மருநதின் விளைவுகளை மதுபானங்கள் அதிகரிக்கிறது. மதுபானமும் நோவாற்றும் மருந்தும் சொல்லமுடியாத விளைவுகளை உங்கள் உடலில் ஏற்படுத்தலாம். இது உங்கள் ஆரோக்கியத்திற்கு மிகவும் அபாயகரமானது.
8. மறு நாள் வரை வாகனங்களை ஓட்டாதீர்கள் அல்லது இயந்திரங்களை இயக்காதீர்கள். வாகனங்களை ஓட்டுதல் அல்லது இயந்திரங்களை இயக்குவதற்கு மிகுந்த கவனம் தேவை, துரிதமாக பதில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். நோவாற்றும் மருந்து இரண்டையும் மோசமாக பாதிக்கும். ரத்து செய்ய முடியாத வேலை ஏதேனும் இருந்தால் வேறு யாரையாவது வைத்து நீங்கள் வாகனத்தை ஓட்டுங்கள்.
9. மறுநாள் வரை எந்த வித ஒப்பந்தங்களிலோ அல்லது சட்ட ஆவணங்களிலோ கையெழுத்திட வேண்டாம். நோவாற்றும் மருந்து உங்கள் உடலையும் மனதையும் மட்டுப்படுத்துகிறது. இதனால் உங்களது திறனாயும் ஆற்றல் பாதிக்கப்படலாம்.

**நோயாளி அல்லது அவரது குடும்ப உறுப்பினர் ஒருவர் மேற்சொன்ன தகவலைப் புரிந்து கொண்டதை தெரிவிக்க வேண்டும்.**

______________________________
நோயாளி/ அவரது குடும்பத்தினர் கையொப்பம்

______________________________
மருத்துவமனை ஊழியரின் கையெழுத்து

______________________________
தேதி





| கண்டுபிடிப்புகள் |
| --- |
| |
| |
| |
| |
| |
| |
| |

இந்தப்படிவத்தின் பிரதி ஒன்றை நோயாளியின் சார்ட்டில் வைக்கவும்.